நகராட்சி நிர்வாக ஆணையர் அலுவலகம்
19 NOV 2008
சென்னை-600 005

60082/08

060084

B3

சுருக்கம்

ஒய்வூதிய பலன் – ஓய்வூதியர்களுக்கான வெளியிடப்பட்ட மருத்துவ உதவித் திட்டங்கள் மாநகராட்சிகள் மற்றும் நகராட்சி ஓய்வூதியர்களுக்கு நீட்டித்து வழங்கி ஆணைகள் வெளியிடப்படுகின்றன.

---

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நப.3) துறை

அரசாணை(பத்தாண்டு) எண்.477 நாள் 10.11.2008.

படிக்கப்பட்டது –

(1) உள்ளாட்சி நிதித் தணிக்கை இயக்குநர் கடிதம் ந.க.எண்.நஒவ4/27516/2007, நாள் 09.10.2007.

(2) நகராட்சி நிர்வாக ஆணையர் கடிதம் ந.க.எண்.39378/08/பி3, நாள் 11.08.2008.

-----

ஆணை –

மேலே முதலாவதாக படிக்கப்பட்ட கடிதத்தில் உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறை இயக்குநர், அரசாணை எண்.562, நிதித் துறை, நாள் 11.07.1995–ல், அரசு ஊழியர் / அரசு ஓய்வூதியர்களுக்கு மருத்துவத் திட்டம் அறிமுகப்படுத்தி ஆணையிடப்பட்டது என்றும், பின்னர் அரசாணை எண்.818, நிதி (ஓய்) துறை, நாள் 20.10.1995, அரசாணை எண்.400 நிதி (ஊதியக்குழு) துறை, நாள் 29.08.2000, அரசாணை எண்.404, நிதி (ஓய்) துறை, நாள் 09.10.2001, அரசாணை எண்.377, நிதி (ஓய்) துறை, நாள் 13.10.2005 மற்றும் அரசாணை எண்.378, நிதி (ஓய்) துறை, நாள் 13.10.2005–ல் அரசு ஓய்வூதியர்களுக்கான மருத்துவ திட்ட உதவித் தொகை வழங்குவதற்கென தகுதி வாய்ந்த சிகிச்சை / அறுவை சிகிச்சை மற்றும் அங்கீகரிக்கப்பட்ட மருத்துவமனைகள் குறித்தான பட்டியல்கள் / அறிவுரைகள் வெளியிடப்பட்டுள்ளன என்றும் தெரிவித்துள்ளார்.

2) அரசாணை (நிலை) எண்120, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 20.05.1999–ல் குடும்ப பாதுகாப்புத் திட்டம் மற்றும் மருத்துவத் திட்டம் ஆகியவை நகராட்சி ஓய்வூதியர்களுக்கு அறிமுகப்படுத்தி ஆணையிடப்பட்டது என்றும், இத்திட்டங்களுக்கான வழிகாட்டு நெறிமுறைகளும் தகுதி வாய்ந்த சிகிச்சை / அறுவை சிகிச்சை மற்றும் அங்கீகரிக்கப்பட்ட மருத்துவமனைகளின் பட்டியலும் அரசாணை (நிலை) எண்.36, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 10.03.2000–ல் வெளியிடப்பட்டன என்றும் தெரிவித்துள்ளார்.

3) அரசாணை எண்.120, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 20.05.1999–ல், பத்தி 4(8)–ல் அரசு ஓய்வூதியர்களுக்கான மருத்துவ உதவித்திட்டம், குடும்ப பாதுகாப்புத் திட்டம் ஆகியவற்றிற்கு பின்பற்றப்படும் நெறிமுறைகள் அவ்வப்போது வெளியிடப்படும் திருத்தங்களுடன் நகராட்சி மற்றும் மாநகராட்சி ஓய்வூதியர்களுக்கான மேற்படி இரண்டு திட்டங்களுக்கும் கடைப்பிடிக்கப்படும் என குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆனால், இந்த வழிவகை அரசாணை எண்.36, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 10.03.2000–ல் வெளியிடப்பட்ட வழிகாட்டு நெறிமுறைகளில் சேர்க்கப்படாத காரணத்தால், அரசு ஊழியர்களுக்கான திட்டங்களுக்கு வெளியிடப்படும் திருத்தங்கள், நகராட்சி ஒய்வூதியர்களுக்கான திட்டங்களுக்கு விரிவுபடுத்த இயலாது எனக் கருதப்பட்டது என்றும், ஆனால், இது சம்பந்தமாக அரசு ஓய்வூதியர்களுக்கு பிறப்பிக்கப்படும் அரசாணைகள் அனைத்தும் நகராட்சி ஓய்வூதியர்களுக்கும் பொருந்தும் எனக் கருதி நடவடிக்கை தொடரலாமா என்பதற்கான தெளிவுரை இதுவரை பெறப்படவில்லை என்றும், அரசு ஓய்வூதியர்கள் மற்றும் நகராட்சி ஓய்வூதியர்களுக்கு மேற்கண்ட இரு திட்டங்களும் வெவ்வேறு காலங்களில் அமுலாக்கப்பட்டது என்றும், இருபாலாருக்கும் சந்தா தொகைகள் வேறுபடுகின்றன என்றும், நகராட்சி ஓய்வூதியர்கள் மாதம் ரூ.30/– எனவும், அரசு ஓய்வூதியர்கள் ரூ.20/– எனவும் செலுத்துகின்றனர் என்றும் மேலும், இம்மருத்துவத் திட்டம் எந்தக் காப்பீட்டுத் திட்டத்துடனும் இணைக்கப்படவில்லை என்றும் தெரிவித்துள்ளார்.

4) அரசு ஓய்வூதியர்களுக்கு வெளியிடப்படும் ஆணைகள், நகராட்சி ஓய்வூதியர்களுக்கு அவ்வப்போது ஆணைகள் தனியாக பெறப்பட வேண்டும் என அரசு கருதும் நிலையில் அரசு ஓய்வூதியர்களின் அரசாணையை நகராட்சி ஓய்வூதியருக்கு நீட்டித்து வெளியிட கோரப்பட்டதில், அரசுக் கடிதம் எண்.8013/எம்இ3/02–4, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 25.11.2002–ல், அரசாணை எண்.36, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 10.03.2000–க்கான (மருத்துவமனைப் பட்டியல்) திருத்தம் மட்டும் வெளியிடப்பட்டது என்றும், மேலும் சில விளக்கங்கள் கோரியதற்கிணங்க நகராட்சி ஓய்வூதியர்களின் மருத்துவ உதவித் திட்ட முன்மொழிவுகளை உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறை இயக்குநரே சரிபார்த்து தொகை வழங்கலாம், மாவட்ட மருத்துவ அலுவலருக்கு அனுப்பி பரிந்துரை பெறத் தேவையில்லை என்ற திருத்தம் மட்டும் வெளியிடப்பட்டது என்றும் தெரிவித்துள்ளார்.

5) அரசாணை, எண்.36, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 10.03.2000–ல் வழங்கப்பட்ட ஆணைகள் மாற்றப்படாத நிலையில், புதிய சிகிச்சைகள் மற்றும் புதிய மருத்துவமனைகள் சேர்த்து வெளியிடப்பட்ட அரசாணை எண்.378, நிதித் துறை, நாள் 13.10.2005–ல் அரசு ஓய்வூதியர்களுக்கு வழங்கப்பட்ட ஆணைகள், நகராட்சி ஓய்வூதியர்களுக்கு நீட்டித்து வெளியிடலாம் என்பதற்கு அரசாணை எண்.458, நிதி (ஓய்வூதியம்) துறை, நாள் 21.09.2007–ல் சில நிபந்தனைகளுக்குட்பட்டு அரசு ஓய்வூதியதாரர்கள் அங்கீகரிக்கப்பட்ட பட்டியலில் உள்ள சிறப்பு சிகிச்சைகளை அங்கீகரிக்கப்படாத மருத்துவமனைகளிலும் (unaccredited hospital) மேற்கொள்ளப்பட்டிருப்பின் சுகாதாரம் மற்றும் நலப்பணிகள் கட்டுப்பாட்டில் இயங்கும் மாவட்ட மருத்துவ அதிகாரிகள் மற்றும் இயக்குநர், மருத்துவப்பணி, அந்தந்த இனத்திற்கு தகுந்தவாறு அனுப்பி அவர்களின் சான்றிதழ்களின் பேரில் மருத்துவ உதவி அனுமதிக்கலாம் என்ற கருத்துக்களின் அடிப்படையில், அரசாணை எண்.378, நிதி (ஓய்) துறை, நாள் 13.10.2005–ல் குறிப்பிட்ட அரசு ஓய்வூதியர்களுக்கு அளிக்கும் மருத்துவ சலுகைகளை நகராட்சி ஓய்வூதியர்களுக்கும், அரசாணை எண்.458, நிதி (ஓய்) துறை, நாள் 21.09.2007–ல் வெளியிடப்பட்ட ஆணைகளை நகராட்சி ஓய்வூதியர்களுக்கும் நீட்டித்து ஆணைகள் வெளியிட உள்ளாட்சி நிதித் தணிக்கை இயக்குநர் அரசைக் கோரியுள்ளார்.

6) மேலே இரண்டாவதாக கடிக்கப்பட்ட கடிதத்தில், நகராட்சி நிர்வாக ஆணையரும் மேற்படி அரசாணைகளை மாநகராட்சி மற்றும் நகராட்சிகளுக்கு நீட்டித்து வழங்க பரிந்துரை செய்துள்ளார்.

7) உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறை இயக்குநர் மற்றும் நகராட்சி நிர்வாக ஆணையர் ஆகியோர்களின் பரிந்துரைகளை ஏற்று, அரசாணை எண்.378, நிதி (ஓய்வூதியம்)த் துறை, நாள் 13.10.2005–ல் அரசு ஊழியர்களுக்கு அளிக்கப்பட்ட மருத்துவ சலுகைகள் மற்றும் அரசாணை எண்.458, நிதித் துறை, நாள் 21.09.2007–ல் அறிவிக்கப்பட்டுள்ளவாறு தமிழ்நாடு நகராட்சி ஓய்வூதியர்களின் மருத்துவ உதவித் திட்டத்தின்கீழ் தகுதியுள்ள மருத்துவ சிகிச்சைகள், தகுதியற்ற மருத்துவமனையில் (unaccredited hospital) மேற்கொள்ளப்பட்டிருப்பின் சுகாதாரம் மற்றும் நலப்பணிகள் கட்டுப்பாட்டில் இயங்கும் மாவட்ட மருத்துவ அதிகாரிகள் மற்றும் இயக்குநர், மருத்துவப்பணி, அந்தந்த இனத்திற்கு தகுந்தவாறு அனுப்பி அவர்களின் சான்றிதழ்களின் பேரில் மருத்துவ உதவி வழங்கி வெளியிட்டுள்ள அரசாணையினை மாநகராட்சி மற்றும் நகராட்சி ஓய்வூதியர்களுக்கு நீட்டித்து வழங்கலாம் என அரசு முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது.

8) இவ்வாணை அ.சா.எண்.52906/நிதி (ஓய்வூதியம்)/08–1, நாள் 23.10.2008–ன் ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

கே. தீனபந்து
அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்
உள்ளாட்சி நிதித் தணிக்கை இயக்குநர், சென்னை – 600 108.
நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை – 600 005.
அனைத்து நகராட்சி ஆணையர்கள்.
அனைத்து மண்டல நகராட்சி நிர்வாக இயக்குநர்கள்.

நகல் –
நிதித் துறை, சென்னை – 600 009.
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (வ.செ. மற்றும் நப.2) துறை, சென்னை – 600 009.
இருப்பு கோப்பு / உதிரி நகல்

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

18/11/08
பிரிவு அலுவலர்
18/11/08